செ.வெ.எண்: 511 நாள்: 09/08/2011

# பத்திரிக்கை குறிப்பு

கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் கைத்தறி நெசவாளர்களின் மேம்பாட்டிற்காக உருவாக்கப்பட்ட நிறுவனம் ஆகும். இந்த நிறுவனத்திற்காக கைத்தறி நெசவாளர்கள் ஆயிரக் கணக்கில் பணிகளை செய்துவருகின்றனர். அவர்கள் செய்யும் பணிக்கு மரியாதை செலுத்தும் விதமாக இனிவரும் காலங்களில் இந்த தங்கும் விடுதியில் 50 சதவீதம் அறைகள் நிரந்தரமாக கைத்தறி நெசவாளர்களுக்கும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கும் பயனளிக்கும் வகையில் சலுகைக் கட்டணத்தில் ஒதுக்கீடு செய்ய இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு துணிகளை உற்பத்தி செய்து வழங்கும் கைத்தறி நெசவாளர்கள் அவர்களுடைய அடையாள அட்டையையும், தங்களது சங்க தனி அலுவலர்களிடமிருந்து பெற்ற பரிந்துரைக் கடிதத்தையும் காண்பித்து கோ–ஆப்டெக்ஸ் விருந்தினர் மாளிகையில் அறை ஒதுக்கீடு பெற்று தங்கிச் செல்லலாம். அதிகபட்சமாக ஒரு தடவை 2 நாட்களுக்கு மிகாமல் சலுகை முறையில் இந்த அறையை உபயோகப்படுத்தலாம்.

இந்தச் சலுகையானது பெடல் தறி சங்க உறுப்பினர்களுக்குப் பொருந்தும். ஆனால் விசைத்தறி சங்க உறுப்பினர்களுக்குப் பொருந்தாது.

கோ–ஆப்டெக்ஸ் விருந்தினர் மாளிகை அறை முன்பதிவுக்கு, தலைமை அலுவலக முதுநிலை உதவியாளர் திரு.S.S.கந்தன்சாமி என்பவரை 94446 49681 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

விடுதி முகவரி:

கோ–ஆப்டெக்ஸ் விருந்தினர் மாளிகை,
கோ–ஆப்டெக்ஸ் வளாகம்,
350, பாந்தியன் சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.

மேலாண்மை இயக்குநர்

1/1

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9